**<u>கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்</u>**

**<u>திருவாரூர் மாவட்டம்</u>**

**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**
**திருவாரூர் மண்டலம்,**
**கூட்டுறவு வளாகம், மருத்துவக்கல்லூரி பின்புறம்**
**தண்டலை, திருவாரூர் – 610 004,**
**<u>இணையதள முகவரி.</u> www.tvrdrb.in**
**மின்னஞ்சல் முகவரி. tvrdrb@gmail.com**

# <u>அறிவிப்பு</u>

**அறிவிக்கை எண். 3/2020 மா.ஆ.நி** **நாள் : 06.07.2020**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக்கடைகளில் காலியாக உள்ள விற்பனையாளர் / கட்டுநர் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 05.08.2020 வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவி | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை விபரம் |
|---|---|---|---|---|
| 1 | நியாய விலைக்கடை விற்பனையாளர் | 1) தொகுப்பு ஊதியம் ரூ.5,000/– (நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை)<br>2) ஓராண்டுக்கு பிறகு ஊதிய விகிதம் ரூ.4,300 – 12,000/– (ஆண்டு ஊதிய உயர்வு 2.5%) | 1. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட். | 8 |
| | | | 2. வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்., | 2 |
| | | | 3. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | 82 |
| | | | மொத்தம் | 92 |
| | நியாய விலைக்கடை கட்டுநர் | 1) தொகுப்பு ஊதியம் ரூ.4,200/– (நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை)<br>2) ஓராண்டுக்கு பிறகு ஊதிய விகிதம் ரூ.3,900 – 11,000/– (ஆண்டு ஊதிய உயர்வு 2.5%) | 1. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட். | 10 |
| | | | மொத்தம் | 10 |
| | | | **ஆக மொத்தம்** | **102** |

மேலே அறிவிக்கப்பட்டுள்ள விற்பனையாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனத்தின் போது அரசுப் பணிக்கு இனச்சுழற்சி முறை பின்பற்றப்படுவது போல் விற்பனையாளர் / கட்டுநர் பணியிடங்களுக்கும் இனவாரி சுழற்சிமுறை ஒவ்வொரு பணியிடத்திற்கும் ஒட்டுமொத்தமாகப் பின்பற்றப்படும்.

மேற்படி பணியிடங்களுக்கான இனவாரி காலிப்பணியிட விவரம் பின்வருமாறு

| பதவி | காலிப் பணியிட எண்ணிக்கை | பொதுப் போட்டி | பிற்படுத்தப் பட்டோர் | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | ஆதி திராவிடர் | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | பழங்குடியினர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனையாளர் | 92 | 29 | 24 | 3 | 18 | 14 | 3 | 1 |
| கட்டுநர் | 10 | 4 | 2 | – | 2 | 1 | 1 | – |

குறிப்பு :

1) தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் பெண்களுக்கான ஒதுக்கீடு தகுதிவாய்ந்த அதே வகுப்பைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.
2) மேற்படி நியமனங்களில் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்குரிய ஒதுக்கீடு பின்பற்றப்படும்.
3) மேற்படி பணியிடங்களுக்கு பார்வைத் திறனற்ற மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்க இயலாது. இத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு பிற மாற்றுத்திறனாளிகள் கொண்டு நிரப்பப்படும்.

2) தகுதிகள்

அ. வயது (01.07.2020 அன்றுள்ளபடி)

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 30.06.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்)

2. விண்ணப்பதாரர்கள் 01.07.2020 அன்று கீழ்க்காணும் வயது குறித்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்

| | | |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – இஸ்லாமியர் ஆகிய வகுப்பினைச் சார்ந்தவர்கள் | அதிகபட்ச வயது வரம்பு இல்லை |
| ii) | மேற்படி வகுப்பினை சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 30 வயதுக்கு மிகாமல் |

குறிப்பு :

மாற்றுத்திறனாளிகள் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஆதரவற்ற விதவை ஆகியோருக்கு அரசு விதிகளின்படி உரிய வயது வரம்பு சலுகை வழங்கப்படும்.

ஆ) கல்வித்தகுதி

| பணியிடம் | கல்வித்தகுதி |
|---|---|
| விற்பனையாளர் | மேல்நிலை வகுப்பு (+2) தேர்ச்சி அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி |
| கட்டுநர் | பள்ளி இறுதி வகுப்பு ( SSLC ) தேர்ச்சி அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி |

குறிப்பு :

விண்ணப்பதாரர்கள் தமிழை ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்ட கல்வித்தகுதியினை இந்த அறிவிக்கை நாளன்று விண்ணப்பதாரர்கள் பெற்றிருக்க வேண்டும்.

3. தெரிவு முறை :

மேற்படி காலிப்பணியிடங்களுக்கான தெரிவு இந்த அறிவிக்கை மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் பெறப்படும் விண்ணப்பதாரர்கள் ஆகியோர்களுக்கு நடத்தப்படும் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மற்றும் வகுப்பு வாரி சுழற்சி அடிப்படையில் காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வில் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும். நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்கள் மேற்படி தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

மேற்படி பணியாளர்களுக்கான தெரிவு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல்முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்படவேண்டும். மேற்சொன்ன காலக்கெடுவிற்குப் பின்னர் செய்யப்படும் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

4. உடற்தகுதி சான்றிதழ்

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்று தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்று சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பங்கள் விநியோகித்தல் :

அறிவிக்கப்பட்டுள்ள விற்பனையாளர் / கட்டுநர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருவாரூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் ( **www.tvrdrb.in** ) தங்களின் பெயர், பிறந்த தேதி, முகவரி மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை உள்ளீடு செய்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

7. விண்ணப்பக்கட்டணம்

| பணியிடம் | விண்ணப்பக்கட்டணம் |
|---|---|
| விற்பனையாளர் | ரூ.150/– |
| கட்டுநர் | ரூ.100/– |

8. கட்டண விலக்கு

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மேற்கண்ட விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

9. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை

மேற்படி விண்ணப்பக் கட்டணத்தினை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், திருவாரூர் மாவட்டம் என்ற பெயரில் திருவாரூரில் மாற்றத்தக்க வகையில் (Demand Draft in favour of "**District Recruitment Bureau, Thiruvarur**" Payable at Thiruvarur) என்ற பெயரில் வரைவோலையாக (DD) எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். வரைவோலையின் பின்புறம் விண்ணப்ப எண், விண்ணப்பதாரரின் பெயர், பிறந்ததேதி மற்றும் முகவரி ஆகியவை பென்சில் கொண்டு எழுதப்பட வேண்டும். வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் (விலக்கு கோருபவர்களை தவிர) நிராகரிக்கப்படும். ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்ப கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பிறந்ததேதி, கல்வித்தகுதி, இனம் மற்றும் சிறப்பு ஒதுக்கீடு கோரும் இனங்களுக்கு தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றிட்டோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்று பெற்றோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது.

11. நேர்முகத் தேர்வு

நேர்முகத்தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு (Communication Address) அனுப்பப்படும். நேர்முகத்தேர்வு நடக்கும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த விவரம் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளாதவர்கள் எக்காரணம் கொண்டும் தெரிவுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள். மேலும், நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் நியமனத்திற்கு உரிமை கோர தகுதியுடையவர் ஆகமாட்டார்.

12. தடையில்லா சான்றிதழ்

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியில் இருப்பவர்களாக இருப்பின் அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திலிருந்து இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கவும் நியமனத்திற்கும் தடையில்லா சான்று பெற்று நேர்முகத் தேர்வு அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களைப் பெறுதல்

அ)
1. விண்ணப்படிவம் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கறுப்பு நிற பந்துமுனைப்பேனாவால் (Ball Point Pen) பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் செய்து அனுப்ப வேண்டும். கையொப்பம் இடாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் அனைத்து கலங்களும் விடுதலின்றியும், அடித்தல் திருத்தல் இல்லாமலும், முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்பக்கட்டணம் (விலக்கு கோருபவர்களை தவிர) தவறாமல் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் சமீபத்தில் எடுத்த பாஸ்போர்ட் அளவு நிழற்படம் ஒன்றினை விண்ணப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்ட வேண்டும். தனியாக ஒரு நிழற்படத்தினை விண்ணப்ப படிவத்துடன் பதிவிறக்கம் செய்யப்படும் நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதத்திலும் (விண்ணப்ப படிவத்தில் ஒட்டப்பட்டது போன்று ஒரேமாதிரியான நிழற்படத்தினை) ஒட்டி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி சான்றிதழ்களை சுய சான்றொப்பம் இட்டு மற்றும் தகவல் அனுப்பப்பட வேண்டிய முகவரியினை எழுதி ரூ.25.00க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய 24 x 10 செ.மீ. அஞ்சல் உறையினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **தபால் மூலமாக மட்டுமே (விண்ணப்பங்கள் நேரில் பெறப்படமாட்டாது)** பின்வரும் முகவரிக்கு **05.08.2020 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்குமாறு** அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

இணைப்பதிவாளர்/ தலைவர்,
கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம்
(திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை பின்புறம்)
மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்,
விளமல், திருவாரூர்,
திருவாரூர் மாவட்டம் – 610 004.

05.08.2020–க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிரகரிக்கப்படும் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்படமாட்டாது. பரிசீலனைக்கும் உட்படுத்தப்படாது. மேலும் அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பதிவாளர் / தலைவர்,
கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
திருவாரூர்.